M

# காலாண்டு பொதுத் தேர்வு - 2017

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## வணிகவியல்

நேரம்: 2.30 மணி　　　　　　　　　　　　　　　　மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**　　　　　　　　20 x 1 = 20

1. பண்டகசாலை வசதி ______ பயன்பாட்டினை வளர்க்கும்.
   a) இட　　b) பணி　　c) கால　　d) வடிவ
2. வணிகம் ______ கிளையே.
   a) வியாபாரத்தின்　b) வங்கிப்பணியின்　c) தொழில்துறையின்　d) பொருளாதாரத்தின்
3. உற்பத்திக்கும், நுகர்வுக்கும் இடையே ஏற்படும் கால இடைவெளியினால் ______ முடங்கிப் போய்விடும்.　a) முதல்　b) காலம்　c) அறிவு　d) இடம்
4. ______ என்பது வழக்கறிஞர், மருத்துவர், ஆடிட்டர் போன்றோர் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட பணிகளைச் சிறப்பாக செய்து வருவது ஆகும்.
   a) வேலை　　b) சிறப்புத்தொழில்　c) வணிகம்　　d) வர்த்தகம்
5. ஒரு முகவர் ______ என்பவரால் நியமிக்கப்படுவர்.
   a) மொத்த வியாபாரி b) உரிமையாளர் c) சில்லறை வியாபாரி　d) உற்பத்தியாளர்
6. வெளிநாடுகளிலிருந்து பொருட்களை வாங்குவதற்கு ______ என்று பெயர்.
   a) இறக்குமதி　b) மறு ஏற்றுமதி　c) ஏற்றுமதி　d) மீட்டு ஏற்றுமதி
7. இடம் பெயர் வியாபாரிகள் ______ என்பதனுள் அடங்குவர்.
   a) சிற்றளவு நிலையிடை சில்லறை கடைகள்　b) பேரளவு நிலையிடை சில்லறை கடைகள்
   c) சுற்றாடும் வணிகர்கள்　d) வணிக முகவர்கள்
8. காஷ்மீரில் விளையும் ஆப்பிள் தமிழ்நாட்டில் விற்கப்படுவது ______ வியாபாரம்.
   a) உள்ளூர்　b) பன்னாட்டு　c) மறு ஏற்றுமதி　d) வெளியூர்
9. ______ ஆம் ஆண்டில் ராக்டேல் முன்னோடிகள் நேர்மைச் சங்கம் என்ற அமைப்பை, நெசவாளிகள் உருவாக்கினர்.
   a) 1944　b) 1844　c) 1744　d) 1743
10. குறைபாடுள்ள, இயலாதவர்கள் மற்றும் வயது முதிர்வுள்ள நபர்களுக்கு இந்த சேவை வணிகம் உதவுகிறது.　a) மின்னணு வாணிகம்　b) தவணை முறை விற்பனை
    c) தொலைத் தொடர்பு வழி வணிகம்　d) மடங்குக்கடை
11. ______ எனப்படுவது ஓர் உலக நாடுகளுக்கிடையேயான கணினிகளின் இணைப்பாகும்.
    a) மின்னணு வணிகம் b) இணையம் c) தொலை தொடர்பு வணிகம் d) அஞ்சல்வழி வணிகம்
12. தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்யப்படும் பொருட்களை வாங்குவது ______ வணிகம் ஆகும்.
    a) மடங்குக்கடை b) தவணைமுறை விற்பனை c) தொலை தொடர்பு d) துறைவாரி பண்டகசாலை
13. பல்வேறு நாடுகளுக்கிடையேயான வணிகம்
    a) உள்நாட்டு வணிகம்　b) வணிகம்　c) இருமுனை வணிகம்　d) பல்முனை வணிகம்
14. அந்நிய செலாவணி சம்பந்தமான மாற்று விகிதாச்சார சச்சரவுகளை தடுப்பதற்காக இவ்வீதாச்சாரம் கீழ்க்கண்ட போது நிர்ணயிக்கப்படுகிறது.
    a) சரக்காணை பிறப்பித்தல்　b) கப்பலாணை பெறுதல்
    c) சங்கத்தீர்வை பெறுதல்　d) துறைமுகத்தள வரி செலுத்துதல்
15. உலக வணிக அமைப்பு எந்த ஆண்டு நிறுவப்பட்டது?
    a) 1999　b) 1995　c) 1996　d) 1997
16. தற்பொழுது மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட வரி ______.
    a) BST　b) PST　c) GST　d) AST
17. இரும்புத்தாது போன்ற பொருட்களை பெருமளவில் ஏற்றிச் செல்லும் கப்பல் ______.
    a) தொட்டிக் கப்பல் b) பெருஞ்சுமைக் கப்பல் c) கொள்கலன் கப்பல் d) முறைவழிக் கப்பல்
18. நீராவி என்ஜினைக் கண்டுபிடித்தவர் ______.
    a) ஜேம்ஸ்வாட்　b) கோபால் ஆர்.பாட் c) மோகினி சேதை　d) பி.கே.கோஸ்
19. வான்வழி அனுப்பீட்டு இரசீது ______ பகுதிகளாக தயாரிக்கப்படுகிறது.
    a) 5　b) 3　c) 2　d) 4

20. சைக்கிள் ரிக்ஷா உலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
a) 1850 b) 1847 c) 1857 d) 1867

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. ஒரே இடத்தில் பல்பொருள் விற்பனை செய்யும் அமைப்பு எது? விளக்குக.
22. பண்டமாற்று முறை என்றால் என்ன?
23. வியாபாரம், வணிகம் - ஒப்பு நோக்குக.
24. அயல்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?
25. அஞ்சல் வழி வாணிகம் என்றால் என்ன?
26. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் அடிப்படைக் கோட்பாடுகள் ஏதேனும் இரண்டு தருக.
27. மறு ஏற்றுமதி வணிகம் என்றால் என்ன?
28. பன்னாட்டு வணிகத்தின் தீமைகள் ஏதேனும் இரண்டைக் கூறுக.
29. போக்குவரத்தின் வரைவிலக்கணம் தருக.
30. விலைவாசி நிலையாக இருப்பதற்கு போக்குவரத்து எவ்வாறு உதவுகிறது?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. கார்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையின் பெயர் என்ன? குறிப்பு வரைக.
32. வர்த்தக நடவடிக்கைகளின் பிரிவுகள் யாவை?
33. தரகர்களுக்கும், தன் பொறுப்பு முகவர்களுக்கும் உள்ள ஏதேனும் 3 வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
34. சரியான வழங்கல் வழியிலுள்ள சந்தை காரணியை விளக்குக.
35. சுற்றாடும் வணிகர் என்பவர் யார்?
36. வாடகை கொள்முதல் முறை விற்பனைக்கும், தவணை முறை விற்பனைக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 2 தருக.
37. ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலையாளர்களை கூறுக.
38. உள்நாட்டு வணிகத்திற்கும், அயல்நாட்டு வணிகத்திற்கும் உள்ள வேற்றுமைகள் ஏதேனும் மூன்றை தருக.
39. தொட்டிக் கப்பல் - விளக்குக.
40. பொதுச் சரக்கேற்றிக்கும், தனிச் சரக்கேற்றிக்கும் உள்ள வேறுபாடகள் ஏதேனும் இரண்டை தருக.

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன? ஏதேனும் மூன்றை விவரி.
(அல்லது)
இரயில் போக்குவரத்தின் குறைபாடுகளை விளக்குக.
42. மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினைக் கூறுக. (அல்லது)
உலக வணிக அமைப்பின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
43. துறைவாரி பண்டகசாலைக்கும், மடங்குக்கடைக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினைக் கூறுக. (அல்லது)
உலகமயமாக்கலின் நன்மைகள் ஏதேனும் 5 தருக.
44. சில்லறை வியாபாரியின் பணிகள் யாவை? (அல்லது)
வணிகத்தின் உட்பிரிவுகள் யாவை? (ஏதேனும் 5)
45. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலையின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை தருக. (அல்லது)
வியாபார முகவர்களின் வகைகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 5)
46. இறக்குமதி வணிக நடைமுறைகளை மிகவும் சுருக்கமாக எழுதுக. (அல்லது)
மொத்த வியாபாரியின் நடைமுறைப் பணிகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக.
47. போக்குவரத்தின் பயன்பாடுகள் ஏதேனும் ஐந்தினை விவரி. (அல்லது)
மின்னணு வாணிபத்தின் குறைபாடுகள் ஏதேனும் ஐந்தினை கூறுக.

*****